இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 27.08.2026

# இசுலாமியர்களும் தி.மு.க.வும்!

இசுலாமியர்களை தி.மு.க. கொச்சைப்படுத்திவிட்டதாக த.வெ.க. உறுப்பினர் ஒருவர் சட்டமன்றத்தில் பேசி, அதற்கு கடுமையான எதிர்ப்பு கிளம்பியதும் அதைத் திசை திருப்புவதற்காக அழுதும் நாடகம் நடத்தி இருக்கிறார். இவை அனைத்தும் சபை மாண்புக்கு இழுக்கு ஏற்படுத்தும் காட்சிகளாக உள்ளன.

**இசுலாமிய மக்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகமும், கழக அரசுகளும், தமிழினத் தலைவர் கலைஞரும், இன்றைய தலைவர் திராவிட மாடல் நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய பணிகளை இசுலாமிய மக்கள் மறக்க மாட்டார்கள். என்றைக்கும் அவர்கள் நன்றிப் பெருக்குடன் இருக்கக் கூடியவர்கள். சிலரைப் போல கூலிக்கு விலை போகக் கூடியவர்கள் அல்ல.**

**தமிழ்நாட்டின் மிகப்பெரிய அரசியல் மாற்றத்தை 1967 ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் உருவாக்கியது திராவிட முன்னேற்றக் கழகம். அந்த மாற்றத்தை உருவாக்கியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவருக்குத் தோள் கொடுத்து நின்றவர் கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத்.**

1972 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் நாள் காயிதேமில்லத் அவர்கள் மறைந்தார்கள். அவரது உடல்நிலை மோசம் அடைந்து வருகிறது என்ற செய்தி கிடைத்து மருத்துவ மனைக்குச் சென்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பார்த்தார்கள். கண்மூடிப் படுத்திருக்கிறார் காயிதேமில்லத் அவர்கள். அப்போது முதல்வர் கலைஞர் அவர்கள், "அய்யா! நான் கருணாநிதி வந்திருக்கிறேன்" என்று சொல்லி இருக்கிறார்கள். லேசாக கண் திறந்து பார்க்கிறார் காயிதேமில்லத் அவர்கள். முதல்வர் கலைஞரைப் பார்த்தார். கை நீட்டி கலைஞரின் கையை பிடிக்கிறார். "முஸ்லீம் சமுதாயத்துக்கு தாங்கள் செய்த உதவிக்கெல்லாம் எனது நன்றி" என்று காயிதேமில்லத் அவர்கள் சொன்னார்கள்.

- ★ **முதல்முறை ஆட்சிக்கு வந்ததுமே மிலாதுநபிக்கு அரசு விடுமுறை விட்டவர் கலைஞர். அதனை அ.தி.மு.க. அரசு ரத்து செய்தது. மீண்டும் ஆட்சிக்கு வந்த கலைஞர் மீண்டும் அரசாணை வெளியிட்டு மிலாது நபிக்கு அரசு விடுமுறை அறிவித்தார்.**
- ★ **உருது பேசும் முஸ்லீம்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தார்.**
- ★ **சிறுபான்மையினர் நல ஆணையத்தை தொடங்கினார்.**
- ★ **வஃபு வாரிய சொத்துக்களைப் பராமரிக்க முதன்முதலாக மானியம் வழங்கினார்.**
- ★ **தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தொடங்கினார்.**
- ★ **உருது அகாடமியைத் தொடங்கினார்.**
- ★ **காயிதேமில்லத் மணிமண்டபம் கட்ட நிதி ஒதுக்கி இடம் ஒதுக்கினார்.**
- ★ **பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டில் இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவிகிதம் உள் ஒதுக்கீடு கொடுத்தார்.**
- ★ **காயிதேமில்லத் மகளிர் கல்லூரியை உருவாக்கினார்.**
- ★ **காயிதேமில்லத் ஆண்கள் கல்லூரிக்கு இடம் வழங்கினார்.**

அத்தகைய தலைவர் கலைஞரின் வழித்தடத்தில் தான் திராவிட மாடல் ஆட்சி நடத்திய மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களும் செயல்பட்டார்கள்.

ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்களுக்காக சென்னை விமான நிலையம் அருகில் நங்கநல்லூரில், ரூ.65 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு ஹஜ் இல்லம் கட்ட அடிக்கல் நாட்டினார். 2024 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு ஆண்டு நிர்வாக மானியமாக ரூ.80 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 31,625 பயனாளிகளுக்கு ரூ.207 கோடி மதிப்பில் கடன்கள் வழங்கப் பட்டது. சிறுபான்மையின மக்கள் பயன் பெறுவதற்காக, பல்வேறு நலத் திட்டங்களுக்கு ரூபாய் 405 கோடி அளவில் அரசு நிதி தரப்பட்டது.

**ஒன்றிய அரசு, சிறுபான்மையின மாணவ - மாணவியருக்கு வழங்கி வந்த கல்வி உதவித்தொகையை நிறுத்தி விட்டது. எனவே மாநில அரசு சார்பில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் முஸ்லிம் மாணவிகளுக்கு 1000 ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. 159 கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மை தகுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. தொன்மையான பள்ளி வாசல்கள் தர்காக்களின் புனரமைத்தல் பணிகளுக்கு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 10 தர்காக்களுக்கு வழங்கப்பட்டது. பள்ளி வாசல்கள், தர்காக்கள், வக்ஃப் நிறுவனங்களை புனரமைத்தல் பணிகளுக்கு இதுவரை 23 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 308 வக்ஃப் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.**

அரசியல் ரீதியாக அச்சுறுத்தல் வரும் போதெல்லாம் இசுலாமியர்களைக் காக்கும் காவல் அரணாக இருப்பதும் தி.மு.கழகம் தான். குடியுரிமைச் சட்டம் மூலமாக அச்சுறுத்தல் வந்தபோது அதனைத் தடுக்கப் போராடியது கழகம். இது எதையும் அறியாமல், மறைக்கும் வகையில் சட்டமன்றத்தில் பொய்யைப் பரப்பி வருகிறது த.வெ.க.

**இன்றைய முதலமைச்சர் விஜய்யின் யோக்கியதை என்ன? 'இசுலாமியர்களை தீவிரவாதிகளாக சித்தரிக்கும்' படங்களில் அதிகம் நடித்தவர் அவர் தான். விஜய் நடித்த 'பீஸ்ட்' படத்தில் இசுலாமியர்களைத் தீவிரவாதிகளைப் போல சித்தரித்தார். இசுலாமிய தீவிரவாதக் குழுக்கள் போலவும், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புகளைப் போலவும் காட்சிகள் வைக்கப்பட்டது. இதை அப்போதே இசுலாமிய அமைப்புகள் எதிர்த்தன. இன்று த.வெ.க.வில் சேர்ந்து சட்டமன்ற உறுப்பினராக ஆகி இருப்பவரும் அன்று இதை கண்டித்து வீடியோ வெளியிட்டவர் தான். குவைத், கத்தார் போன்ற நாடுகளில் இப்படத்துக்குத் தடை என்கிற அளவுக்கு நிலைமைகள் போனது.**

**விஜய் நடித்த 'துப்பாக்கி' படத்திலும் இசுலாமியர்கள் தீவிரவாதிகளாக உருவகப்படுத்தப்பட்டார்கள். குண்டு வைப்பவர்களாக காட்சிப்படுத்தப்பட்டார்கள்.**

'ஜனநாயகன்' படத்திலும் இசுலாமிய வெறுப்புக் காட்சிகள் தான் அதிகமாக இருந்தன. 'விஜய் இன்னும் திருந்தல' என்று இசுலாமிய அமைப்புகள் சமூக வலைதளங்களில் கடுமையான விமர்சனத்தை வைத்தார்கள். 'எப்போது மாறும் உங்கள் மனநிலை?' என்று இயக்குநர் அமீர் கேள்வி எழுப்பினார். 'விஜய்யிடம் இருந்து இசுலாமியர்கள் தள்ளி இருக்க வேண்டும்' என்று அகில இசுலாமிய அமைப்பினர் சொன்னார்கள். இப்படிப்பட்ட விஜய்யை தலைவராக ஏற்றுக் கொண்டவர்களுக்கு தி.மு.க.வைப் பற்றிப் பேச அருகதை இல்லை.

**"சிறுபான்மை மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான நலத் திட்டங்களை அரசின் மூலமாக தொடர்ந்து நிறைவேற்றும் அதே காலத்தில் - இசுலாமியரின் அரசியல் உரிமைகளையும் பெற்றுத் தரும் இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் எந்நாளும் இருக்கும்" என்று திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அளித்துள்ள உறுதிமொழி கல்வெட்டாக இருக்கிறது என்பதை நினைவூட்டுகிறோம்.**

●●

## திருவண்ணாமலை மாவட்ட வளர்ச்சிக்கு

# த.வெ.க. அரசு முட்டுக்கட்டை போடக்கூடாது!

## சட்டப்பேரவையில் - கழகக் கொறடா எ.வ.வேலு வலியுறுத்தல்!

**சென்னை, ஆக.27- சட்டப்பேரவையில், வந்தவாசி தொகுதி கழக உறுப்பினர் ச.அம்பேத்குமார் பேசியபோது எழுந்த விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய கழகக் கொறடாவும், முன்னாள் அமைச்சருமான எ.வ.வேலு, "திருவண்ணாமலை மாவட்டத்தின் வளர்ச்சிக்கு த.வெ.க. அரசு முட்டுக்கட்டை போடக்கூடாது" என்று குறிப்பிட்டார்.**



அவர் பேசியதாவது:-

2008-ஆம் ஆண்டில் எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டத்தில், ஓர் ஆணி தயாரிக்கும் தொழிற்சாலை கூட இல்லாத நிலை இருந்தது. ஏனெனில், நாங்கள் வட ஆற்காடு வேலூர் மாவட்டத்தில் இருந்து பிரிந்து வந்தவர்கள். வாணியம்பாடி தோல் தொழிற்சாலை உள்ளிட்ட அனைத்து தொழிற்சாலைகளும் வேலூர் பகுதியிலேயே அமைந்துவிட்டதால், எங்களிடம் எதுவுமே இல்லாத சூழல் நிலவியது. அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான், 2008இல் நான் உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சராக இருந்தபோது, அண்ணன் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார். அப்போது எங்களுக்கு 'சிப்காட்' வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை வைத்தோம்.

அந்த அடிப்படையில்தான், ராணிப்பேட்டைக்குச் செல்லவிருந்த 10,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் காலணித் தொழிற்சாலை திட்டத்தை 2008 ஆம் ஆண்டில்திருவண்ணாமலைக்குக் கொண்டு வந்து தொடங்கினார்கள். அதற்குப் பின்னர் அம்மையார் அவர்களின் ஆட்சியில், "இரண்டாவது விரிவாக்கம்" என்ற பெயரில் விரிவாக்கப் பணிகளைச் செய்தார்கள்.

அதன்பின் எடப்பாடியார் முதலமைச்சராக இருந்தபோது, அவரது ஆட்சியில் "மூன்றாவது விரிவாக்கம்" என்று அவர்தான் முதன்முதலாகத் தொடக்கி வைத்தார். ஏறத்தாழ 9 ஊர்களில் நிலம் கையகப்படுத்த அரசாணை வெளியிட்டு விளம்பரப்படுத்தியவர் அவர்தான்.

அந்த 9 ஊர்களான அத்தி, இளநீர்குன்றம், தேக்கத்தூர், நெடுங்கல், வீரப்பக்கம், மேல்மா, வட அளப்பிறந்தான், குறும்பூர், நர்மாப்பள்ளம் ஆகிய இடங்களை அரசாணை வெளியிட்டவர் அவர். நில எடுப்பு அதிகாரியை நியமித்ததும், 8 வட்டாட்சியர்களை நியமித்ததும் அவர்தான்.

இந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. 2021இல் நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே, அந்த மூன்றாவது விரிவாக்கப் பணிகளை நாங்களும் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் நில எடுப்புப் பணிகளுக்குச் சென்றோம். அப்படிச் செல்லும்போது, அந்த 9 ஊர்களில் நர்மாப்பள்ளம், குறும்பூர் ஆகிய இரண்டு ஊர்களில் மட்டும்தான் பிரச்சனை ஏற்பட்டது. மற்ற ஊர்களில் உள்ள நிலங்கள் அனைத்தும் களர் நிலங்கள்; பயன்பாட்டிற்கு உகந்தவை அல்ல.

அப்போது அந்த இரண்டு ஊர்களைச் சேர்ந்த விவசாயிகள் "நாங்கள் நிலம் கொடுக்க மாட்டோம்" என்று கூறி, மேல்மா கூட்டு ரோடு பகுதியில் சுமார் 50 பேர் உண்ணாவிரதம் இருந்தார்கள்.

### இளைஞர்கள் உண்ணாவிரதப் போராட்டம்!

பொதுமக்களாகிய அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் 5060 பேர் உண்ணாவிரதம் இருந்த நிலையில், அந்தப் பகுதியைச் சார்ந்த 5,000 பட்டதாரிகளும் பொறியியல் படித்த இளைஞர்களும் "எங்களுக்கு வேலைவாய்ப்பு வேண்டும்; எனவே இந்த நிலத்தை நீங்கள் கையகப்படுத்திதான் ஆக வேண்டும்" என்று கோரிக்கை வைத்தார்கள்.

இளைஞர்கள் எல்லாம் "சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் இருக்கிறீர்கள்; எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக் கூடாதா?" என்று கேட்கிறார்கள். அவர்கள் வேலைவாய்ப்பு வேண்டி உண்ணாவிரதம் இருக்கும் சூழல் ஏற்பட்டது. இந்த நிலையில், இந்தப் பிரச்சனையை தூண்டிவிட்டது யார் என்று பார்த்தபோது, ஓசூரைச் சேர்ந்த அருள் ஆறுமுகம் என்பவர் எனத் தெரியவந்தது. அவர் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவரும் அல்ல; எங்கள் பகுதி விவசாயியும் அல்ல. அவர் ஓசூருக்கு அருகில் உள்ள சிங்காரப்பேட்டையை மையமாகக் கொண்டவர். அவர் எங்கள் ஊர் விவசாயிகளைத் தூண்டிவிட்டுப் பிரச்சனையை ஏற்படுத்தினார்.

இரண்டு நாட்களாக இதைப் பற்றிப் பேசும்போது, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு முழு விவரமும் சரியாகத் தெரியாத காரணத்தால், அவர் ஒரு செய்தியைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார். அதனால்தான் நான் நேரடியாகப் பதில் கூறுகிறேன்.

ஏனெனில், இதற்கு ஒரு விடிவு காலம் வர வேண்டும். நீங்கள் பேசும்போது நான் அமைதியாக அமர்ந்து கேட்கிறேன்; எந்த விதியின் கீழ் பேசுவது என்று தெரியாமல் அமர்ந்திருக்கிறேன். ஆனால், செய்தி வெளியாகிவிட்டதால் நான் பேச வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அப்போது என்ன சூழ்நிலை என்றால், அமைச்சராக இருக்கும் நீங்களோ அல்லது நானோ யாரையும் "கைது செய்" என்று கூற நமக்கு அதிகாரம் கிடையாது. அந்தப் பகுதியைச் சேர்ந்த காவல்துறை உயர் அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அன்றைக்குப் பெருந்தொழில் துறைச் செயலாளராக இருந்த அருண் ராய் ஆகியோர்தான் சேர்ந்து, "நில எடுப்புக்கு எதிராக 50 பேரை வைத்துக்கொண்டு தூண்டிவிடுகிறார்" என்ற அடிப்படையில், உளவுத்துறை அளித்த தகவலின்படி அரசாங்கத்திற்கு வந்த செய்தியை வைத்து அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தார்கள்.

அப்போது நான் ஊரிலேயே இல்லை; தென் பகுதியில் சுற்றுப் பயணத்தில் இருந்தேன். ஊருக்கு வந்து பத்திரிகையைப் பார்த்த போதுதான், "விவசாயி குண்டர் சட்டத்தில் கைது" என்ற செய்தியைக் கண்டேன். உடனே முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்றேன். "விவசாயி என்ன தவறு செய்திருந்தாலும் சிறையில் அடைத்தது தவறானது" என்று கூறியவுடன், முதலமைச்சர் அவர்களே நேரில் அழைத்து, அவர்களை விடுதலை செய்ய உத்தரவிட்டார். அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று பிணை பெறவில்லை; அரசாங்கமே முன் வந்து விடுதலை செய்தது. இதுதான் வரலாறு!

### உண்மையைத்தான் பேசுகிறேன்!

எங்கள் மாவட்டத்திற்குப் பொறுப்பு அமைச்சராக வந்திருக்கிறீர்கள்; மாவட்ட வளர்ச்சிக்கு உதவுவீர்கள் என்று நம்புகிறோம். நடந்த உண்மையைத்தான் நான் பேசுகிறேன்.

எங்கள் கேள்வி என்னவென்றால், இந்த இரண்டு ஊர்களைத் தவிர மீதி ஊர்களில் உள்ள விவசாயிகள் நிலம் கொடுக்க முன்வந்தார்கள். "மூன்றாவது விரிவாக்கம்" எடப்பாடி பழனிசாமி அவர்கள் காலத்தில் தொடங்கப்பட்டு, நில எடுப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

எங்கள் மாவட்டத்தைச் சாராத ஒரு நபரோடு புகைப்படம் எடுத்துக்கொண்டதை அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். "மூன்றாவது விரிவாக்கத்திற்கு நிலம் எடுக்கப்போகிறீர்களா? இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தரப்போகிறீர்களா? இந்த ஆட்சியின் நோக்கம்தான் என்ன? சிப்காட் வளரப்போகிறதா, இல்லையா?" என்றுதான் கேள்வி கேட்டாரே தவிர, உங்கள் மீது குற்றச்சாட்டு கூறவில்லை.

எனவே, தயவுசெய்து எங்கள் மாவட்ட வளர்ச்சிக்கு உறுதுணையாக இருங்கள். சிப்காட் வந்தால்தான் எங்கள் பகுதி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

2008ஆம் ஆண்டில் நான் போராடி அந்தச் சிப்காட் திட்டத்தை வாங்கி வந்தபோது, தற்போதைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கல்லூரி வாழ்க்கையில் இருந்திருப்பார் என்று நினைக்கிறேன் (அவரது வயதை ஒப்பிட்டுச் சொல்கிறேன்).

அப்படிப்பட்ட சூழ்நிலையில், நாங்கள் உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவதோ அல்லது கோரிக்கை வைப்பதோ எதற்காக என்றால், எங்கள் மாவட்டம் விவசாயத்தைத் தவிர வேறொன்றையுமே பார்க்காத ஒரு பூமி. இங்கே உள்ள லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும் என்றால் அதற்குச் சிப்காட்தான் ஒரே காரணம்.

அதனால்தான், எடப்பாடியார் ஆட்சியில் தொடங்கப்பட்ட அந்த மூன்றாவது விரிவாக்கம் வந்தால் எங்கள் மாவட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற அடிப்படையில் இந்தக் கோரிக்கையை வைக்கிறேன்.

இது உங்கள் மீதான குற்றச்சாட்டு அல்ல, கோரிக்கை மட்டுமே. இதற்கு பொதுப்பணித் துறை அமைச்சர் சகோதரர் அவர்கள் எங்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமே தவிர, இதற்கு எதிராக இருப்பவர்களோடு நீங்கள் புகைப்படம் எடுத்துக்கொள்வதையோ அல்லது அவர்களுக்கு ஆதரவாகப் பேசுவதையோ எங்கள் மாவட்டத்தில் யாரும் விரும்பவில்லை.

இவ்வாறு எ.வ.வேலு அவர்கள் குறிப்பிட்டார்.

## தமிழகத்தில் ஆக.31 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு!

*சென்னை, ஆக. 27- தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மிதமான மழையும், மதுரை, சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.*

*இன்று (27ம் தேதி) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், 28ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், கடலூர், விழுப்புரம் செங்கல்பட்டு மாவட்டங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.*

*29 முதல் 31ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும். இத்தகவலை சென்னை வானிலை ஆய்வு மையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.*




திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் நடைபெற்ற கம்பன் விழாவில் பட்டிமன்றத்தை துவங்கி வைத்து பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கழக துணைப் பொதுச்செயலாளர் – முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி பரிசுகளை வழங்கினார். உடன் கழக கொள்கை பரப்புச்செயலாளர் திண்டுக்கல் லியோனி, முன்னாள் மருத்துவக் கல்வி இயக்குனர் டாக்டர் ராஜமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், கை.ரா. சடகோபன், நகர செயலாளர் பூக்கடை கணேசன், பேரூராட்சி தலைவர் அஞ்சுகம் கணேசன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் சரவணக்குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் இரா.கிருஷ்ணராஜ் , மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அன்பழகன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நிர்மல் ராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.